**செய்தி வெளியீடு எண் : 550** **நாள்: 06.04.2022**

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் எதிர்வரும் கோடை காலத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் சீரான மின் விநியோகம் வழங்குவது குறித்து அனைத்து தலைமை பொறியாளர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

இன்று (06.04.2022) சென்னை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் எதிர்வரும் கோடை காலத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் சீரான மின் விநியோகம் வழங்குவது குறித்து அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்களுடன் காணொலி காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் திரு. எஸ். சண்முகம், இயக்குநர்கள், தலைமை பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், வரக்கூடிய கோடைகால மின்தேவை குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.கோடைக்காலத்தில் மின்கட்டமைப்பில் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை போர்க்கால அடிப்படையில் சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

ஆய்வின் போது அனல், புனல் மற்றும் எரிவாயு மின் உற்பத்தி நிலையங்களின் மூலமாக உற்பத்தி செய்யக்கூடிய மொத்த மின்சாரத்தின் அளவு பற்றி கேட்டறிந்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவைப்படும் மின்சாரத்தின் மொத்த தேவையினை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாட்டு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க அனைத்து அலுவலர்களையும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

**பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில்:**

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளாக மின் இணைப்பு வழங்கக் கோரி பதிவு செய்து காத்திருந்த விவசாயிகளுக்காக, 1 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் வழங்கும் சிறப்பான திட்டத்தை 23.09.2021 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் தமது திருக்கரங்களால் தொடங்கி வைத்தார். கடந்த 6 மாத காலத்திற்குள் 1 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் அவர்களின் தலைமையின் கீழ் அனைத்து அலுவலர்களும் மிகவும் சிறப்பாக செயல்பட்டு இதே சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை சிறப்பிக்க கூடிய வகையில் வருகின்ற 16-ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவகத்திற்கு வருகை புரிந்து 1 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு ஆணைகளை வழங்குவதற்கான விழாவில் தலைமையேற்று பயன் பெற்றுள்ள விவசாயிகளிடம் காணொலிக் காட்சி வாயிலாக சிறப்புரை ஆற்றவுள்ளார்கள்.

இந்த கோடைக் காலத்தில் சீரான மின் விநியோகம் வழங்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவு. அந்த உத்தரவின் அடிப்படையில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்கு அலுவலர்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டார்.

சமுக வளைத்தலங்களில் ஆதாரம் இல்லாமல் மின் தடை குறித்த புகார்கள் பொய்யாக பரப்பப்படுகின்றது. விரைவில் மின் நுகர்வோர் புகார்கள் தெரிவிக்க புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

இவ்வாறு மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்.

பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரம் மின் நுகர்வோர் மின் சேவை மையமான மின்னகத்தை ஆய்வு செய்தார்கள்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in